**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 66/2017**

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23–ம் நாள் வெள்ளிக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 23.02.2024 | தந்தை/கணவர் பெயர்: | ஜெயராமன் |
| பெயர்: | அமிர்தம்<br>(PW-1 Chief ) | வயது : | 57/2024 |
| கிராமம்: | சீர்காழி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை : 23.02.2024.**

நான் இவ்வழக்கின் 2–ம் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 01.07.2013 தேதியிட்ட பாகப்பாத்தி விடுதலைப்பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 26.12.2014 தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 13.01.2015 தேதியிட்ட 1–ம் வாதியின் பெயரில் உள்ள கணினி சிட்டாவின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

1–ம் வாதி பெயரில் உள்ள கிஸ்து ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது (எண்ணிக்கை–3).** 22.05.2012 1–ம் வாதியின் தாயாருக்கு நில சீர்திருத்த இணை ஆணையரால் வழங்கப்பட்ட தீர்வு சான்றின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ்களை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது (எண்ணிக்கை–4).** 09.08.2011 தேதியிட்ட 1–ம் வாதியின் தகப்பனாருக்கு நில சீர்திருத்த இணை ஆணையர் வழங்கிய ஒப்படைவு ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 1–ம் வாதி தவணை பாக்கி செலுத்தியதற்கான ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.8 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது (எண்ணிக்கை–3).**

1–ம் வாதியின் பெயரிலுள்ள கணினி சிட்டாவின் நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 29.12.2017 தேதியிட்ட 1–ம் வாதி திருவெண்காடு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் கையிருப்பு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 27.08.2021 தேதியிட்ட திருவெண்காடு காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட புகார் ஏற்பு ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 12.11.2021 தேதியிட்ட 1–ம் வாதியின் தகப்பனாரின் இறப்பு சான்றின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 10.07.2015 தேதியிட்ட 1–ம் வாதி அனுப்பிய பதில் அறிவிப்பின் கையிருப்பு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அறிவிப்பை 1–ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.14 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.** 03.08.2015 தேதியிட்ட ரீ–ஜாய்ன்டர் அறிவிப்பின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.